Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஐப்பசி 23 ஞாயிற்றுக்கிழமை (09-11-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 324

## பொலீஸ் காவல் நிலையம் மீது பூவரசங்குளத்தில் தாக்குதல்!

### சப். இன்ஸ்பெக்டர் உட்பட ஐவர் பலி

வவுனியா, நவ. 9

வவுனியா, பூவரசங்குளம் பொலீஸ் காவல் நிலையம் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட தாக்குதலில் சப். இன்ஸ்பெக்டர் உட்பட 5 பேர் கொல்லப்பட்டனர்.

அதிகாலை 3 மணி முதல் 4.15 வரை நீடித்த இத்தாக்குதலில் புலிகளின் இரு அணிகள் ஈடுபட்டன என்றும்—

இச்சம்பவத்தில் மேலும் 7 பொலீஸார் காயமடைந்தனர் என்றும் 4 பேரின் நிலை கவலைக்கிடம் என்றும் பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

காவல் நிலையமும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

பொலீஸார் மோட்டார் மற்றும் சிறு ஆயுதங்கள் கொண்டு பதில் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5-21)

## கோயில் தேர் முட்டி அறையில் 3 இளைஞர் மூச்சுத் திணறி மரணம்

வடமராட்சி, நவ. 9

கோயில் தேர் முட்டியில் உள்ள காற்று உட்புக முடியாத சிறிய அறையினுள் ஜெனரேற்றரை வைத்து இயக்கி விட்டு இரவு அந்த அறைக்குள்ளேயே படுத்து உறங்கிய இளைஞர்கள் மூவர் மறுநாள் காலையில் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தேர் முட்டியுடன் கூடிய அறையிலேயே இப்பரிதாப சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

அன்றைய தினம் ஆலயத்தில் நடைபெற்ற திருக்கல்யாண உற்சவத்தை ஒட்டி இரவிரவாக ஜெனரேற்றர் இயக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெனரேற்றரில் இருந்து வெளியேறிய புகை அறைக்குள் நிரம்பியதால் இவர்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரேற்றர் இயங்கிய அறைக்குள் படுத்தனர்

### நச்சுப்புகை காரணம் என தெரிவிப்பு

வடமராட்சி, நவ. 9

ஜெனரேற்றர் இயங்கிக்கொண்டிருந்த அறையை உடைத்து திறந்து பார்த்தபோது மூன்று இளைஞர்களும் இறந்து கிடந்தனர்.

தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்முட்டி அறையில் மரணமான இளைஞர்களின் மரண விசாரணையின்போது இறந்தவர்களின் சகோதரர்கள் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் உடுப்பிட்டி பதில் மரணவிசாரணை அதிகாரி வி. நடராசா முன்னிலையில் இவ் விசாரணை நடைபெற்றது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மாங்குளம் பகுதியில் தொடர்ந்து மோதல்!

## படை நகர்வை தடுக்க புலிகள் முயற்சி

கொழும்பு, நவம்பர் 9

'வெற்றி உறுதி' படையினர் மூன்றாவது கட்ட இறுதி இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ள இச்சமயம் மாங்குளத்தில் தொடர்ந்து படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம் பெற்று வருகின்றன.

படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடும் சண்டைகள் இடம்பெற்றுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

மாங்குளத்தில் பாதுகாப்பு முன்னணி நிலைகளிலுள்ள படையினர் மீது விடுதலைப் புலிகள் மோட்டார்த்தாக்குதல்களை நடத்தி உள்ளனர்.

படையினர் பதிலுக்கு மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல் நடத்தி புலிகளுக்குப் பெரும் உயிரிழப்பை ஏற்படுத்தி இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மோதல்களில் இராணுவத் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மற்றுமொருவர் காயமடைந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-9-5-164-21)

## கிழக்கிலும் 'ராகிங்' மாணவன் கவலைக்கிடம்

### மாணவி ஞாபக சக்தி இழப்பு

கொழும்பு, நவ 9

ராகிங் காரணமாக பாதிக்கப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றுமொரு மாணவியும் ஞாபக சக்தியை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவைச் சேர்ந்த எஸ் விஜயநாதன் என்ற பிரஸ்தாப மாணவன் ஏற்கனவே குடல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் —

தொடர்ந்து தோப்புக் கரணங்கள் போட்டதால் மயங்கி வீழ்ந்த அம்மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ராகிங் கொடூரம் அதிகரித்திருப்பதால் புதிய மாணவர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பத்மநாபா படுகொலை வழக்கில் இருவருக்கு கடும் காவல் தண்டனை

## சுப்புலட்சுமி ஜெகதீசன் உட்பட 15 பேர் விடுதலை

புதுடில்லி, நவ. 9

ஈ.பி.ஆர். எல். எவ். தலைவர் கே. பத்மநாபா மற்றும் 14 பேரின் படுகொலை தொடர்பான வழக்கில் சென்னை தடா நீதிமன்றம் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் சின்னசாந்தனுக்கும் மற்றொரு குற்றவாளியான ஆனந்தராஜுவுக்கும் கடுங்காவல் தண்டனைவிதித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சின்னசாந்தனுக்கு 6 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், 2 ஆயிரம் ரூபா அபராதமும் —

ஆனந்தராஜுக்கு 5 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட பத்மநாபா மற்றும் 14பேரின் குடும்பங்களுக்கும் தலா 2லட்சம் ரூபா வீதம் அரசு வழங்க வேண்டும் என்றும், அது அரசின் தார்மீகக் கடமை என்றும் நீதிபதி தமது தீர்ப்பில் கூறினார்.

குற்றஞ்சாட்டப்பட்ட 17 பேரில் இவர்கள் இருவரைத் தவிர மற்றைய 15 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சரும், தற்போதைய சட்டப்பேரவை உறுப்பினருமான திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், முன்னாள் உட்துறைச் செயலாளர் ஆர். நாகராஜன் ஆகியோர் விடுவிக்கப்பட்ட 15 பேரில் அடங்குவர்.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் திகதி சென்னையில் ஈ.பி ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபாவும் 14 பேரும் கொலை செய்யப்பட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாவலடியில் மோதல்! ஐவர் பலி என தெரிவிப்பு

வவுனியா, நவ. 9

கொடிகாமம் நாவலடிப் பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக 'புலிகளின் குரல்' வானொலி நேற்றுத் தெரிவித்தது.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதலில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 'புலிகளின் குரல்' மேலும் தெரிவித்தது. (இ-5-164)

## தொலைபேசி நிலையம் தீ வைப்பு

கொழும்பு, நவ 9

ஒந்தாச்சிமடத்தில் நேற்று முன்தினம் இரவு தொலைபேசி நிலையம் ஒன்றுக்குத் தீ வைக்கப்பட்டது.

இதனால் களுவாஞ்சிக்குடிப் பகுதியில் தொலைத்தொடர்புகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

மூன்று நாள்களுக்குள் இதனைச் சீர்செய்துவிட முடியும் என்று இலங்கை ரெலிகொம் நிறுவனம் தெரிவித்துள்ளது. (இ-5)

## புலிகள் இயக்கம் மீதான தடை சரியானது என்கிறது அமெரிக்கா

புதுடில்லி, நவ. 9

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனப் படுத்தி அமெரிக்காவில் அந்த இயக்கம் இயங்குவதற்கு விதித்துள்ள தடை சரியானதே என அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கம் உட்பட 30 அமைப்புகளை பயங்கரவாத இயக்கங்கள் என்று அறிவித்து கடந்த மாதம் அமெரிக்கா தடை விதித்ததை எதிர்த்து அமெரிக்க நீதிமன்றத்தில் விடுதலைப்புலிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு பற்றிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் தெய்வேந்திரஐயர் துசீந்திரன்

தொண்டமானாறு செல்வச்சந்நிதியைச் சேர்ந்த தெய்வேந்திரஐயரின் மகன் துசீந்திரன் 08 - 11 - 97 சனிக்கிழமை அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னார் தெய்வேந்திரஐயர் மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி மகேந்திர ராணி, ஜெயேந்திரன் [கனடா]. சசீந்திரன், ரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஸ்ரீரஞ்சனின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [09 - 11 - 97] ஞாயிறு காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறு . இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி. தெய்வேந்திரஐயர்.
[தந்தை]

செல்வச்சந்நிதி,
தொண்டமானாறு. [51051]

## திருமதி நாகமணி ஆச்சிப்பிள்ளை

அராலி வடக்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் தற்போது தவசிகுளம் கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி ஆச்சிப்பிள்ளை 07-11-1997 வெள்ளி இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் வல்லிபுரம் நாகமணியின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி, கந்தசாமி, சண்முகம், யோகேஸ்வரி, பத்மநாதன், ஜெகதீஸ்வரி, ஜெகநாதன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியம், தெய்வநாயகி, வைத்திலிங்கம், அன்னலட்சுமி, வேலும் மயிலும் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 09- 11- 1997 ஞாயிறு முற்பகல் 11மணியளவில் தவசிகுளம், கொடிகாமம் பொதுமயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா, சண்முகம்
(மகன்)

தவசிகுளம்,
கொடிகாமம். (51045)

## சுப்பிரமணியம் சிற்றம்பலம்

(சட்டத்தரணி)

வட்டுக்கோட்டை மாவடியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், முதலாம் குறுக்குத் தெருவிலும் இல. 3A, கின்ஸி றோட், கொழும்பு-8 இலும் வசித்து வந்தவருமான சுப்பிரமணியம் சிற்றம்பலம் (சட்டத்தரணி) 14-10-97இல் கொழும்பில் இறைவனடிஎய்திவிட்டார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எஸ். சண்முகராஜா,
(தம்பி), (மதிப்பாளர்)

387, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (51048)

## செல்லையா துரைசிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், நல்லூர் 23, குறுக்குத் தெருவை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா துரைசிங்கம் 27 - 10 - 97 அன்று குருநாகலில் காலமானார்.

அன்னார் திருமதி துரைசிங்கம் றஜனியின் அன்புக் கணவரும், மாலதி (பிரான்ஸ்), முகுந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மனோகரனின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும், மேனகா, மீரா ஆகியோரது பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 01 - 11 - 1997 குருநாகலில் நடைபெற்றன.

தகவல்:
ச. சின்னத்துரை [ம்பந்தி]

கோப்பாய். (51050)

## மார்க்கண்டு சபாபதிப்பிள்ளை

(இளைப்பாறிய ஓவசியர்-நீர்ப்பாசன இலாகா)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக்கொண்ட மார்க்கண்டு சபாபதிப்பிள்ளை 8-11-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சுந்தரலிங்கம், திருமதி மா பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவயோகேஸ்வரி (ஜேர்மனி), தவஞானேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்றவர்களான தவச்செல்வன், விக்னேஸ்வரி மற்றும் செல்வி திலகரஞ்சினி (பிரதேச சபை பாலர் பாடசாலைஆசிரியர்), புவனேஸ்வரசுந்தரம்(ஜேர்மனி), பராசக்தி (கொழும்பு). ஞானேஸ்வரன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத்தந்தையும், திசவீரசிங்கன் (ஜேர்மனி), குபேந்திரராசா (லண்டன்), சிவரூபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வன் தரணிகரனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 9-11-97 இன்று காலை 10-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கியாறு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ச. திலகரஞ்சினி
(மகள்)

வட்டு-தென்மேற்கு
வட்டுக்கோட்டை. (51059)

## அலுவலகம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 9

இணுவில் மக்லியொட் தனியார் வைத்திய சாலையில் கடந்த ஏழு வருடங்களாகத் தற்காலிகமாக இயங்கிவந்த தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை கடந்த 5 ஆம் திகதி முதல் மல்லாகம் பங்களா வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் இயங்கத் தொடங்கி உள்ளது. (ஐ)

## அதிபர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 9

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கோட்டக்கல்வி அதிகாரி ஆ. ராஜேந்திரன் தலைமையில் நடைபெறும். (ஐ)

## தட்டிவான் கட்டணம் குறைப்பு

செம்பியன்பற்று, நவ. 9

வடமராட்சி சிற்றூர்தி சங்கம் வடமராட்சியில் இருந்து வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு நடத்திவரும் தட்டிவான் சேவைக்கு பயணக்கட்டணத்தை குறைத்துள்ளது. அத்துடன் அரச ஊழியர்களுக்கு விசேட சலுகையினையும் சங்கம் செய்துள்ளது.

பருத்தித்துறையில் இருந்து செம்பியன்பற்று வரை செல்வதற்கு பொதுமக்களுக்கு 25 ரூபாவும், அரச ஊழியருக்கு 20 ரூபாவும் அறவிடப்படுகிறது.

எனினும் திங்கள், வெள்ளி ஆகிய இரு நாள்களில் மட்டுமே செம்பியன் பற்று வரை சேவை நடத்தப்படுகின்றது. ஏனைய நாள்களில் பருத்தித்துறையில் இருந்து நாகர் கோயில் வரை சேவை மட்டுப்படுத்தப்படுவதால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். (ஐ-36)

## வீடு தேவை

யாழ்ப்பாண நகர எல்லைக்குள் அலுவலக பாவனைக்கு குறைந்தது 06 படுக்கை அறை வசதிகளையும், பெரு வளவையும் கொண்ட வீடு தேவை.

தொடர்பு:
மே/பா இல. 663
உதயன்
பணிமனை,
யாழ்ப்பாணம்.
(51024)

## கணக்கீடு

D. SAM

**A/L 98 DAY**
செவ்வாய், வியாழன்
(காலை) 7-30 — 8-30

**A/L 98**
செவ்வாய், வியாழன்
(காலை) 6-00 — 7-00

**A/L 99**
சனி, ஞாயிறு
(மாலை) 3 - 4

பாடங்கள்
1. கிரயக் கணக்கீடு
2. கணக்குப் பதிவியல்
3. கம்பனி
4. கொள்ளல் கொடுத்தல் கணக்கும் வருமானம் செலவுக் கணக்கும்.

**LANTHU INSTITUTE**
MANIPAY ROAD,
ANAIKODDAI.

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
(51043) - நிர்வாகி

# 2 ஆம் ஆண்டு நினைவு



## க. சி. தாமோதரம்பிள்ளை

[ உரிமையாளர் – முருகன் அரிசி ஆலை, முருகன் களஞ்சியம், முருகன் கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையம் ]

ஜனனம்: 10 - 12 - 1922
மரணம்: 09 - 11 - 1995

சீராண்ட செல்வமே சிவன்தாள் நீயடைந்து
ஈராண்டானதுவோ உன்னையெண்ணித் துடிக்கின்றோம்.
பாராண்ட பண்புற்றே பான்மைமிகு மிறைவன் தாள்
பேராண்டு வாழிய நீர் பெருமையிந்த உலகிருக்கும்.

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மற்றும் நிர்வாகிகள், ஊழியர்கள்.

கண்டி வீதி,
சாவகச்சேரி. (சி/2008)

# 3 ஆம் ஆண்டு நிறைவு

## நினைவஞ்சலி



கணபதியின் தாள் சேர்ந்த கணேசன்

## அமரர் சைவப்புலவர் வித்துவான் பண்டிதர் சி.நா கணேசன் B.O.L

(சித்த வைத்திய கலாநிதி)

தங்கமார் மேனி தாமரை வதனம்
தண்ணளி ஒழுகுநல் விழிகள்
சங்கை சேர் உருவில் ஐங்கரன் பெயரைத்
தாங்கிய கணேசனே! உந்தம்
துங்கமார் உளமும் தூய நற் பேச்சும்
துகளறு செந்தமிழ் அறிவும்
எங்களின் நெஞ்சில் என்றுமே அகலா
ஏந்தலே! அஞ்சலி ஏற்பீர்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 182, பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம். (51057)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவிரி நீர் பிரச்சினையில் பாராமுகம்:

# மத்திய அரசில் இருந்து விலகுவதாக கருணாநிதி மீண்டும் எச்சரிக்கை

புதுடில்லி, நவ. 9

ஐக்கிய முன்னணி அரசில் தொடர்ந்து நீடிப்பதா வேண்டாமா என்பது குறித்து தி.மு.க. விரைவில் பரிசீலிக்கும் என்று தமிழக முதல்வர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று அதிகாலை சென்னையில் அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

காவிரி நீர்வள ஆணையம் அமைக்கும் திட்டத்துக்கான அறிவிப்பை வெளியிடுவது தொடர்பாக பிரதமர் ஐ.கே. குஜ்ரால் தமிழகத்துக்கு அளித்துள்ள வாக்குறுதி மழுப்பல் நிறைந்ததாகவும், தட்டிக் கழிக்கும் பாங்கில் அமைவதாகவும் அந்த அறிக்கையில் கருணாநிதி குற்றஞ் சாட்டியுள்ளார்.



காவிரி நீர்வள ஆணையம் அமைப்பது தொடர்பான விவகாரம் குறித்து தமிழகப் பொதுப் பணித்துறை அமைச்சர் துரைமுருகன் நேற்று முன்தினம் புதுடில்லியில் பிரதமரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

காவிரி நீர்ப் பங்கீடு தொடர்பான விசாரணை மன்றத்தின் இடைக்கால உத்தரவை விரைவாகச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அது தொடர்பான அறிவிப்பை வெளியிடுமாறும் பிரதமரிடம் அவர் கேட்டுக் கொண்டார்.

பிரதமருடன் பேச்சு நடத்திவிட்டு அமைச்சர் துரை முருகன் சென்னை திரும்பிய பின்னரே முதல்வர் கருணாநிதியின் இந்த அறிவிப்பு வெளியானது.

(ஐ)

# ஐக்கிய முன்னணியில் காங்கிரஸ் சேராது!

## கேசரி திட்டவட்டமாகத் தெரிவிப்பு

பெங்களூர், நவ. 9

மத்தியில் உள்ள ஐக்கிய முன்னணி அரசில் சேருவது என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்று காங்கிரஸ் கட்சித்தலைவர் சீதாராம் கேசரி தெரிவித்தார்.

இது குறித்து ஏற்கனவே தாம் கூறிய கருத்துக்களை பத்திரிகைகள் பலவும் தவறாக மேற்கோள் காட்டிவிட்டன என்றும் பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசும் போது கேசரி கூறினார்.

மத்திய அரசுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது பற்றி காங்கிரஸ் கட்சி எந்த ஒரு யோசனையையும் வெளியிடவில்லை என்றும் அவர் சொன்னார்.

மத்திய அரசில் சேர்ந்து கொள்ளுமாறு ஐக்கிய முன்னணியிடம் இருந்து அழைப்பு எதுவும் விடுக்கப்பட்டால் அதை காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளுமா என்று அவரிடம் கேட்கப்பட்டபோது — அத்தகைய யோசனை ஒன்றை காங்கிரஸ் கட்சி பரிசீலிக்கும் என்று மட்டும் கூறினார்.

(ஐ)

## உயிரிழந்தோர் எண்ணிக்கை உயர்வு

பாங்கொக், நவ. 9

தாய்லாந்திலும், வியட்நாமிலும் வீசிய 'லிண்டா' என்ற கடும் சூறாவளியினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 300 ஆக உயர்ந்துள்ளது. டல்லாயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

(ஐ)

# தென்மராட்சிப் பகுதியில் மரம் தறிப்பதற்குத் தடை

## பிரதேச செயலர் அறிவிப்பு

தென்மராட்சி. நவ. 9

தென்மராட்சி பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி மரங்கள் தறிபபது, வாகனங்களில் ஏற்றிச் செல்வது ஆகியவை முற்றாகத் தடைசெய்யப் பட்டுள்ளது. அனுமதியின்றி மரங்கள் தறிப்பவர்கள், வாகனங்களில் ஏற்றிச் செல்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சகலகிராம அலுவலர்களுக்கும் பிரதேச செயலர்பணிப்புரை விடுத்துள்ளார்.

மரங்கள் தறிக்கவுள்ள பொது மக்கள் தத்தமது பகுதி கிராம அலுவலரிடம் விண்ணப்பம் செய்து அனுமதியைப் பெற்ற பின்னரே மரத்தினைத் தறிக்க வேண்டுமெனவும், தறிக்கப்பட்ட மரங்களை வேறு இடத்திற்கு வாகனங்களில் ஏற்றிச் செல்ல வேண்டியிருப்பின் அதற்கான அனுமதியைப் பெற்ற பின்னரே ஏற்றிச் செல்ல முடியும் எனவும் மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

(ஐ-117)

# மூலிகைப் பண்ணையில் மாணவர் பயிரிட வசதி

வலிகாமம் தெற்கு, நவ. 9

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் அண்மையில் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மூலிகைப் பண்ணையில் யாழ்ப்பாண பாடசாலை மாணவர்களும் பங்குபற்றுவதற்குவசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

இம் மூலிகைப் பண்ணையில் தாம் விரும்பும் மூலிகைச் செடிகளை நட்டுப் பராமரித்து வளர்ப்பதற்கு ஒவ்வொரு பாடசாலைக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் பாடசாலைகளுக்கு தலா பத்து சதுர அடி நிலம் வழங்கப்படும் எனவும் தேவையைப் பொறுத்து அவர்களுக்கு மேலும் நிலம் ஒதுக்கித்தர முடியும் எனவும் மூலிகைப் பண்ணைக்குப் பொறுப்பான சேவைக்கால ஆசிரியர் எஸ். சிவனேசன் தெரிவித்தார்.

(ஐ-152)

# சனசமூக நிலையங்களுக்கான நன்கொடையை அதிகரிக்குக

## சமாஜக் கூட்டத்தில் தீர்மானம்

திருநெல்வேலி, நவ. 9

சன சமூக நிலையங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அரச நன்கொடைப் பணம் அதிகரிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று அண்மையில் நடைபெற்ற யாழ். மாவட் சன சமூக நிலையங்களின் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சம்மேளனத்தின் தலைவர் நா. போஜன் தலைமையில் யாழ். மத்திய கல்லூரியில் இக் கூட்டம் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் யுத்த கால அனர்த்தங்களினால் சேதமடைந்துள்ள சன சமூக நிலையங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு நிதி உதவி வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் உட்பட மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொண்டார்- சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி, ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் கருத்திட்ட ஆலோசகர் ஸ்ரீவன் விர்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ-135)

## பரிசளிப்பு விழா

திருநெல்வேலி, நவ. 9

யாழ். வண்ணை-வைத்தீஸ்வராக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுனர் நினைவு விழாவும் எதிர் வரும் செவ்வாய்க் கிழமையன்று கல்லூரி அதிபர் து. சந்தோஷம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராசா பிரதம அதிதியாக கலந்துகொள்வார்.

(ஐ-135)

# புதிய ஆண்டுக்கான திட்ட முன்மொழிவுகளைவழங்குக

## பொதுமக்களிடம் அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். மாவட்டத்தில் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்களுக்கானமுன்மொழிவுகளையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு பொது மக்களிடமும், சமூக சேவை நிறுவனங்களிடமும்யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :—

சென்ற வருடம் கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு திட்டங்கள் தருமாறு சமூகசேவை அமைப்புக்கள் மற்றும் அனுபவம் ஆற்றல் வாய்ந்தவர்களிடம் கேட்கப் பட்டபொழுது உங்களால் பல திட்டங்கள் சமர்ப்பிக்கப் பட்டன. அதற்கு எனது நன்றிகள். தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள் பல நேரடியாகவோ அல்லது மாற்றங்களுடனோ பிரமாண அடிப்படை, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் வழங்குகின்ற நிதியைக் கொண்டு செயற்படும் நுண்கருத்திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் சேர்க்கப்பட்டுள்ளன.

1998ஆம் ஆண்டு மக்களின் அடிப்படைத் தேவைகளான கல்வி, சுகாதாரம் குடிநீர் போன்றவையும் மற்றும் வருமானம் தரக்கூடிய விவசாயம், கால்நடை, மீன்பிடி, சிறுகைத்தொழில் ஆகியவைகள் தொடர்பாகவும், கிராமமட்ட தேவைகள் பற்றி, சென்ற ஆண்டைப் போலவே திட்ட முன்மொழிவுகள் உங்களிடமிருந்து அடுத்த ஆண்டுக்கும் எதிர் பார்க்கப்படுகின்றன. இத் தேவைகள் பற்றி கிராம மட்டத்தில் உள்ள நிறுவனங்கள் தனியாகவோ, ஒன்றாகவோ கலந்துரையாடி ஒரு திட்டத்தினைச் சமர்ப்பிப்பது விரும்பத்தக்கது. கிராம மட்டத்தின் தேவைகளை இனம் காண்பதற்கு கிராமசேவையாளர், விவசாய போதனாசிரியர்கள், மீன்பிடிப் பரிசோதகர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள். சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்றோரை அணுகி அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று அப்பிரதேசத்தின் முன்னுரிமைத் தேவைகளை இனம் காணலாம்.

ஆகவே உங்களால் இனம் காணப்படுகின்ற திட்டங்கள் பின்வரும் விவரங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்

★ திட்டம் பற்றிய சுருக்கமான விவரம்.

★ அத்திட்டத்தினைத் தெரிவு செய்வதற்கான காரணங்கள்.

★ அத் திட்டத்தினால் ஏற்படும் நன்மைகள்.

இத்தகைய விவரங்கள் அடங்கிய திட்டங்களை உங்கள் பகுதிப் பிரதேச செயலருக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புவதுடன் அதன் பிரதியை எனக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஐ]

## கனடாவிலிருந்து 'தங்கம்மா நான்மணி மாலை'

யாழ்ப்பாணம் நவ. 9

துர்க்காதுரந்தரி சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சமய, சமூகப்பணிகளைப் பாராட்டி கனடாவிலிருந்து நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

கனடாவின் ஒன்ராறியோ மாநிலத்தில், இந்து சமயப் பணிகளை முன்னெடுத்துச் செல்லும், இந்து சமயப் பேரவை மாதாந்தம் ஒரு நூல் என்ற திட்டத்தையும் செயற்படுத்தி வருகிறது.

அந்த வகையில் இவ்வருடம் ஜூலை மாதத்தில் ''தங்கம்மா நான்மணி மாலை'' என்ற நூல் வெளியிடப்பட்டது. இதனைக் கவிஞர் வி. கந்தவனம் எழுதியுள்ளார். சிவத்தமிழ்ச் செல்வியின் சமயச் சொற்பொழிவுத் திறனையும், அவரது சமய சமூகச் சிறப்புப் பணிகளையும் பாராட்டி இந்த நான்மணி மாலையைப் புனைந்துள்ளார் கவிஞர். பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் உப அதிபர்பண்டிதர் க. சச்சிதானந்தன் இந்நூலுக்கு முன்னுரை எழுதியுள்ளார். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் படம் நூலின் அட்டையை அலங்கரிக்கிறது.

(அ)

# மரக்கறி வகைகளின் விலை உயர்வு

வலிகாமம் தெற்கு, நவ. 9

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மரக்கறிகளின் விலைகள் உயர்வடைந்துள்ளன.

மருதனார் மடம், சுன்னாகம் ஆகிய சந்தைகளுக்கு கடந்த சில நாள்களாக மரக்கறி வகைகள் வருவதும் வீழ்ச்சியடைந்துள்ளது.

கிலோ இருபதுரூபா வரையில் விற்பனையாகி வந்த மரக்கறி வகைகள் தற்போது கிலோ 70 ரூபாவாக விற்பனையாகின்றன.

பயற்றங்காய் கிலோ 70 ரூபா. கத்தரிக்காய் கிலோ 45 ரூபா. பூசணி வகைகள் கிலோ 45 ரூபா. வாழைப் பழம் கிலோ 30 ரூபா. வெங்காயம் கிலோ 35 ரூபாவாக விலைகள் அதிகரித்துள்ளன.

[ஐ-152]

## சிரமதானம்

திருநெல்வேலி, நவ. 9

கமநலச் சேவைத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகள் பூர்த்தியடைவதை முன்னிட்டு நல்லூர் கமநலச் சேவை கேந்திர நிலைய பகுதியிலுள்ள நாயன் மார்கட்டு குளமும் வாய்க்காலும் சிரமதான மூலம் ஆழமாக்கப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் கமநலச் சேவைக்கேந்திர நிலைய வளவும் சிரமதான மூலம் துப்புரவு செய்யப் பட்டுள்ளது.

(ஐ-135)

## உரம் விநியோகம்

திருநெல்வேலி, நவ. 9

நல்லூர் கமநலச் சேவை கேந்திர நிலைய பிரிவைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நெற் பயிர்களுக்கான யூரியா உரம் ஏக்கருக்கு அரைஅந்தர் என்ற அடிப்படையில் விநியோகம் செய்யப்படவுள்ளது. இப் பிரிவிலுள்ள விவசாய சம்மேளனங்கள் உரத் தேவை பற்றிய பட்டியலைதயாரித்து சிபார்சு செய்து தமது அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று மேற்படி கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி. பாமா கந்தப்பு தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி, பெரியஅரசடி, தாமோதரம்பிள்ளை வீதிச் சந்தியில் இருந்து 50 யார் தூரத்தில், அண்மை யில் கட்டப்பட்ட 6 பரப்புக் காணியில் சகல வசதி களும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

சு. முருகேசு,
பெரியஅரசடி,
சாவகச்சேரி.

(51042)

## அரச அதிபர் பார்வையிட்டார்

நெடுந்தீவு, நவ. 9

''குமுதினி'' மோட்டார் படகின் புனரமைப்பு வேலை களை கடந்த செவ்வாய்க் கிழமை யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் நேரில் சென்று பார்வையிட் டார்.

(ஐ-111)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## சுன்னாகம்
## 1998 ஆம் ஆண்டிற்கான
# கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகள், கடைகள் என்பவற்றை 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் 18 - 11 - 97 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் யாவும் வலிகாமம் தெற்கு பிரதேசசபை செயலாள ரால் கேள்வி வைப்புப்பணம், கேள்விப்பத்திரப்பணம் ஆகியன செலுத்தியதன் பேரில் 17 - 11 - 97 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை ''விசேட ஆணையாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்'' என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் எழுதப்பட்டு அரக்கு முத்திரை யிட்டு பதிவுத் தபால் மூலம் 18 - 11 - 97 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்திற்கு முன் பிரதேசசபை தலைமையலுவலகத்தில் வைக்கப்பட் டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 18 - 11 - 97 ஆம் திகதி பி. ப. 2-00 மணிக்கு பிரதேசசபை தலைமையலுவலகத் தில் வைத்துத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப் பத்திரங்களைப் பெறுபவர்கள் அடையாள அட்டையை யும் தவறாது கொண்டுவருதல் வேண்டும். தனியார் காணிகளில் இறைச்சிக் கடை நடத்துவதற்கு காணிச் சொந்தக்காரரிடமிருந்து அனுமதிக் கடிதம் பெற்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

எந்த ஒரு கேள்வியையும் அல்லது அதன் பகுதியையும் காரணங்காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. சந்தைகளை குத்தகைக்குப் பெற்றுக் கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருள் களின் பெறுமதியில் 3 % இற்கு மேல் வரி அறவிடக்கூடாது.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத் தில் பெற்றுக்கொள்ளலாம்.

## அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. சுன்னாகம் உபஅலுவலகம் | | | | |
| 01. சுன்னாகம் மத்திய சந்தை (மாதாந்த வாடகைக்குரிய கடைகள் தவிர்ந்த) | — | 100/- | 2,000/- | 6,00,000/- |
| 02. உடுவில் கிளிச்சந்தை | — | 100/- | 1,000/- | 12,000/- |
| 03. மீன் சந்தையில் அமைந்துள்ளவை | | | | |
| 1) சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை | 100/- | 100/- | 2,000/- | 1,50,000/- |
| 2) சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 100/- | 1,000/- | 50,000/- |
| 3) உமல் கடதாசி விற்பனை செய்யும் உரிமம் | | 50/- | 500/- | 2,000/- |
| 4) கருவாட்டுக்கடை இல. 3 | 60/- | 50/- | 100/- | 2,000/- |
| ,, 4 | 60/- | 50/- | 100/- | 7,200/- |
| ,, 5 | 60/- | 50/- | 100/- | 6,500/- |
| ,, 6 | 60/- | 50/- | 100/- | 2,500/- |
| ,, 7 | 60/- | 50/- | 100/- | 2,500/- |
| 2. உடுவில் உப அலுவலகம் | | | | |
| 01. மருதனார்மடம் சந்தை | — | 100/- | 2,000/- | 10,00,000/- |
| 02. இணுவில் சந்தை | — | 100/- | 1,000/- | 6,500/- |
| 03. இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | — | 100/- | 500/- | 80,000/- |
| 04. தாவடி தெற்கு மாட்டிறைச்சிக்கடை | — | 100/- | 500/- | 55,000/- |
| 05. உடுவில் ஆலடி மாட்டிறைச்சிக்கடை | — | 100/- | 500/- | 75,000/- |
| 3. ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 01. ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக்கடை | — | 50/- | 500/- | 75,000/- |
| 4. இழுபொறி இயந்திரம் பெட்டியுடன் வாடகைக்கு அமர்த்துதல் 1-1-98 தொடக்கம் 31-12-98 வரையான காலப்பகுதிக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட குப்பை கூளங்களை அகற்றுவதற்கு இழு பொறி இயந்திரம் வாடகைக்கு அமர்த்துதல் | — | 100/- | 500/- | — |

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம், 1997-11-06.

(சி-1982)

# 37 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் வைரமுத்து திரவியம்

எங்கள் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் கரணவாய் மேற்கு கிராம அலுவலராகப் பணி செய்துவரும்

திரு. வை. சிறீரங்கநாதன்

அவர்களின் தாயார் வைரமுத்து திரவியம் இறைபதம் அடைந்த 37 ஆம் நாள் நினைவஞ்சலியில் அன்னா ரின் குடும்பத்துடன் இணைந்து நாமும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த் திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்.
கரவெட்டி.

(சி/1980)

# கேள்வி அறிவித்தல்

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

இவ் வைத்தியசாலைக்குப் பின்வரும் பொருள் களை வழங்குவதற்குப் பொருத்தமானவர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1) இரும்புக் கட்டில்கள் ( IRON BEDS )
2) வைத்தியசாலைச் சிறிய அலுமாரிகள் ( HOSPITAL STAND )

இப் பொருள்களின் மாதிரியை அலுவலக நாள் களில் காலை 9 00 முதல் மாலை 3. 00 மணி வரை பார்வையிடலாம். வைத்தியசாலைச் சிறிய அலுமாரி கள் வேப்பம் பலகையினால் செய்யப்பட வேண்டும். இப் பொருள்களின் மாதிரி வடிவம் இணைக்கப்பட்ட விண்ணபப்படிவங்களை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 50/- ஐச் செலுத்தி இப் பணிமனை யில் அலுவலகநாள்களில் 10-11-97க்கு முன் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது பதி வுத் தபால் மூலமோ இப் பணிமனைக்கு அனுப்பி வைக்கவும். தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப் பங்களின் கடித உறையின் இடதுபக்க மேல் மூலை யில் ''தளபாடம் செய்வதற்கான கூறுவிலை கோரல்'' என்று எழுதப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்கப்படும் கடைசித் திகதி 19-11-97காலை10. 00 மணியாகும். அன்றையதினம் காலை 10. 30 மணிக்கு கூறுவிலைகள் திறக்கப்படும். அவ்வேளை கூறுவிலை சமர்ப்பிப்பவரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ பிரசன்னமாய் இருக்க கலாம்.

முன்னர் தளபாட வழங்கலுக்காக இப் பணிமனை யில் பதிவு செய்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

பொருள்கள் யாவும் 31 - 12 - 97-க்கு முன்னர் செய்து ஒப்படைக்கப்பட வேண்டும்.

மேலதிக விவரங்களை இவ் வைத்தியசாலைக் கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி
(செல்வி) ந கனகரத்தினம்
பணிப்பாளர்.

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
08/11/97

(சி/2005)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 22 — 01 — 1939

மறைவு: 10 — 10 — 1997

## ஜெகதீஸ்வரி நடராஜா [B. Sc.]

(ஓய்வு பெற்ற ஆசிரியை, மத்திய மகாவித்தியாலயம், வயாவிளான்)

தகவல்:
திரு. இ. நடராஜா,
(கணவர்)
(நிறைவேற்றுப் பொறியியலாளர்,
வீதி, அபிவிருத்தி அதிகாரசபை)
யாழ்ப்பாணம்.

தேவாலய வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(51014)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெள்ளி விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

எதிர்வரும் 13 - 11 - 97 அன்று
நடைபெறும்
அகில இலங்கை சைவக் குருமார்
அர்ச்சகர் சபையின்

வெள்ளி விழாவில் ஸ்தாபகர் கௌரவிப்பு, வெள்ளி விழா மலர் வெளியீடு, பரிசளிப்பு, சமயக் கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள் என்பன சிறப்புற இருபாலை கற்பகப் பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

சகல விதமான வர்ண குழம்பு வகைகளும்
மோட்டார் சைக்கிள், மாபிள் கற்கள்

சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்:

## வேல் வர்த்தக நிலையம்

114, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி-1989)



THE 46th Annual Festival of Carel Singing by THE YOUTH Of the NORTH at The Peto Memorial Hall


St. John's College, Jaffna.

On Saturday 15th November 1997 at 10.00 a.m.

Admission By Programme Rs. 10/-

(c/1992)


# மாணிக்க மாஸ்ரர்



பிறந்தவன் முதுமை அடைவான்; காலத்துக்குக் காலம் பலவித பிணிகள் வரும்; இறுதி என்றொன்று இருந்து இறப்பு நேரும். இவை இயல்பானதும் இயற்கையானதும் ஆகும். இந்த உண்மை நிலையை, உறுதிப்பாட்டை எதனாலும் மாற்ற முடியாது.

சாவு பயங்கரமானது. எனவே, அதனை அணைக்க காத்திருக்க வேண்டும். அந்தச் சாவு வருவதற்கு முன் செய்யக்கூடிய நல்ல அறங்களை விரைந்து செய்திடல் வேண்டும்.

ஒருவனைப் பதவியோ, பணமோ பெரிதாக்குவதில்லை. ஒருவன் செய்த நன்மைகளே - பயன்பாடுகளே அவன் மரணத்திற்குப் பின்னும் தொடருவன ஆகும்.

அமரர் மாணிக்கவாசகர் அவர்களின் நற்றொண்டுகள் பண்டு பேசக்கூடியனவாக அமைந்துள்ளன. அவை யாவும் அவரது நற்பெயரை நிலை நிறுத்தி நிற்கும்.

வாழ்வாவது மாயமில்லை. வாழ்வு தொடர்ச்சியானது. அமரர் ஐயாக்குட்டி மாணிக்கவாசகர் அவர்களின் சமய, சமூகத் தொண்டுகள் மீசாலைப் பகுதியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை — நிலைத்து நிற்பவை ஆகும்.

ஆசிரியராக—அதிபராக உயர்ந்து கல்வித் தொண்டாற்றினார்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை என்பதற்கிணங்கச் சிறந்த விவசாயியானார். மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டாலும், அவரது கல்விச் சேவையும் விவசாய அபிவிருத்தியும் வன்னி மாவட்டத்தில் கூடுதலாக அமைந்திருந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில், சாவகச்சேரித் தொகுதியின் முக்கிய பேச்சாளர்களில் ஒருவர். அந்நேரத்தில் விபத்தில் அகால மரணத்தைத் தழுவிய அவரது மூத்த மகனின் நிகழ்ச்சி நெஞ்சை நெகிழ்ச்சிப் படுத்திய வரலாற்றுக் குறிப்பாகும்.

கூட்டுறவுத் துறையிலும் அவர் பங்கு கொண்டிருந்தார்.

அவரது சமயப்பணி அளப்பரிய தொன்றாகும். மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயிலின் சரித்திரத்தோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகி விட்டது. இவ்வாலயத்தின் தர்மகர்த்தா சபைத் தலைவராக இருந்து ஆலயத் திருப்பணிகளை முன்னெடுத்ததோடு தனது உபயமாக வசந்த மண்டபம், வைரவர் ஆலயப் புனருத்தாரணத்தையும் செய்தார். ஆலயத்திற்கான நிரந்தர வருமானத்திற்கென கடைத் தொகுதி ஒன்றையும் வகுத்துக் கொடுத்தார். கலியாண மண்டபம் ஒன்றையும் ஆக்கிடத் திட்டமிட்ட வேளையில் காலன் அவரது கணக்கை முடித்துக் கொண்டான்.

அமரர் அவர்களின் வெற்றிக்கு முழுமையாக அமைந்தது அவரது சிரிப்பு; கனத்த தொனியில் நறுக்கென்ற கதை; துணிவுடன் செயலில் இறங்கும் தன்மை; கம்பீரமான நடை; தமிழர் நாகரிக 'நாசனல்'; தோளில் கரைபோட்ட மடித்த உத்தரீகம்; வட்ட வடிவமான திருநீற்றுப் பொட்டும் நீங்காது நின்று நிலைத்திடுவனவாகும்.

மாணிக்கவாசகர் இன்றில்லை. அவர் செய்த பணி மீசாலை மாவடிப் பிள்ளையார் கோயிலில் அணியும் மணியுமாக விளங்குகின்றது.

அ. பொ. செல்லையா.

மீசாலை. (51044)


யாழ்ப்பாணம்
மத்திய கல்லூரி
(தேசியப் பாடசாலை)

## பாடசாலை அனுமதி-1998

★ ஆண்டு — 06-க்கான அனுமதிக்காக விண்ணப்பப் படிவம் கல்லூரியில் அலுவலக நேரத்தில் விநியோகிக்கப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 1997-11-21
வெள்ளிக்கிழமை

அனுமதித் தேர்வு: 1997-11-29 சனிக்கிழமை
புதிய நேரம் காலை 09 மணிக்கு

★ ஏனைய வகுப்புக்களுக்கும் அனுமதிக்காக கல்லூரியின் விண்ணப்பப் படிவத்திலேயே விண்ணப்பிக்கலாம்.

இருக்கும் மிகச்சில வெற்றிடங்களுக்கும் மாணவர்கள் தேர்வின் மூலமே தெரிந்தெடுக்கப்படுவர்.

க. இராசதுரை
அதிபர்
1997-11-08 (சி/1996)




யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை
பட்டப்பின்
கல்வித் தகைமை
கற்கைநெறி
1995/96

மேற் குறிப்பிட்ட கற்கை நெறிக்கான விரிவுரைகள் முழுநேர மாணவர்களுக்கு 1997 - 12 - 01 ஆம் திகதியும், பகுதிநேர மாணவர்களுக்கு 1997-12-06 ஆம் திகதியும் காலை 9 00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றோம்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.
(சி/1999)


# நீங்காத நினைவு அஞ்சலிகள்

31ஆம் நாள் 61ஆம் நாள்



## கணபதிப்பிள்ளை பொன்னையா

பிறப்பு: 28-04-1912 இறப்பு: 10-10-1997

என்னைக் கைப்பிடித்த நாளிலிருந்து
கலங்காமல் காத்திட்ட என் தெய்வமே!
என் துணையென்று மகளை வளர்த்தாய்!
காலனவன் மகளைக் கவர்ந்ததும்
துணையாய்ப் போய்ச் சேர்ந்தீரோ?
காலமெல்லாம் தனியே தவிக்கவிட்டு
இறைவனடி சேர்ந்து விட்டீரோ?
யாரை நோவேன்? யார் துணை
கொள்வேன்?

ஆறாத்துயர் கொள்ளும்
மனைவி: பொ. நாகம்மா

சொந்த இடம்: வீமன்காமம்,
தெல்லிப்பளை.

(சி-1997)



## S. பவானிதேவி

தோற்றம்: 17-12-1957 மறைவு: 10-09-1997

குழந்தையில்லாக் குறை தீர்க்க
பெறாமகளாய் வந்துதித்த என்செல்வமே!
எம் கடன் தீர வழிசமைப்பாய் என்று
இருந்தோம். காலனவன் கொடூரநோயால்
உன்னை அழித்திடவே ஆறாத்
துயர்கொண்ட அப்பாவை உன் அஞ்சலிக்கு
முன்னே துணை கொண்டாயோ?
நாமெல்லாம் உனக்குப் பிறராய்ப்
போனோமோ?

ஆத்மசாந்திக்காய்ப் பிரார்த்திக்கும்
பெரியம்மா: பொ. நாகம்மா,
அம்மா: இ. பொன்னம்மா
தற்காலிக முகவரி: பூமனைவேன்,
மருதனார்மடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. இல. 40, கோயில்வீதி, யாழ்ப்பாணம். [சி/1998]

இறைச்சிக்கோழிகள் கல்பேட், சேவல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [51038]

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 204, கஸ்தூரியார் வீதி, யா/இந்துக் கல்லூரிக்கு அருகில் அல்லது 340, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (பழைய சண்முகானந்த அச்சகம்). [51041]

### வாடகைக்கு

நல்லூர் பருத்தித்துறைவீதியில், நல்லூர் கோயில் முன்புறத்திலிருந்து 100 மீற்றர் தொலைவில்இல.272இல் உள்ள மாடி வீடு சகல வசதிகளுடன் வாடகைக்குஉண்டு. நேரில் வந்து தொடர்பு கொள்ளவும். [50952]

### விற்பனைக்கு

வெள்ளவத்தையில் திறம்பட நடந்துவரும் ரெக்கோடிங் பார் (Music and Recording Bar) நவீன உபகரணங்களுடனும் C. D உடனும் விற்பனைக்கு உண்டு. இடவசதி தேவைப்படின் ஒழுங்கு செய்துகொடுக்கப்படும். தொடர்பு: தொலைபேசி இல. 594568. [சி/1962]

### A/L பௌதிகவியல்

பௌதிகவியல், தூயகணிதம், பிரயோககணிதம், வணிகப்புள்ளி விவரவியல் பாடங்கள் மிகச்சிறப்பாக அனுபவம் பெற்ற ஆசிரியரினால் தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். R.பாலசுப்பிரமணியம் B.Sc. (Cey) Dip .in Edu, 17/1. பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [51046]

### மொழிபெயர்ப்பாளர்

ஜேர்மன பாஷை படிப்பித்தல், மொழிபெயர்ப்பு ஆங்கிலம், தமிழ் என்பவற்றிற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; சபாநாயகம், ''றூடிக்கொட்'' 33, கண்டி வீதி,யாழ்ப்பாணம்.[51028]

### தவறிவிட்டது

இரத்தினம் மாலினி என்பவரது தேசிய அடையாள அட்டை 785142845V யாழ்ப்பாணத்துக்கும் இணுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் விலாசத்துக்கு ஒப்படைக்கவும். K. K. S. வீதி, நியூ லங்கா பாம், இணுவில். [51030]

திருமதி ஜானகி நாகேஸ்வரன் என்பவரது 555790902V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும் அத்தோடு நா. சிறிரங்கநாதன் என்பவரது 692960645V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும் தொழில்சார் அடையாள அட்டையும் நல்லூர்ப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். கலைமணி லேன், கட்டைப்பிராய், யாழ்ப்பாணம். [51031]

## நோயாளர் சிரமம்

மந்திகை மருத்துவமனையில் உள்ள வார்ட்டுக்களில் உள்ள கட்டில்களில் கட்டில் சீலைகள் இல்லை இதனால் வார்ட்டில் தங்கியிருக்கும் நோயாளிகள் பெரும் சிரமம் அடைகின்றனர். (ஐ-109)

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
# விசேட அறிவித்தல்

அம்பிகை அடியார்களே!

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் கடந்த **07-09-97** இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி சில ஏமாற்றுப் பேர் வழிகள் நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் பெயரால் திருப்பணி நிதி வசூலிப்பதாக எமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

திருப்பணி நிதி சேகரிப்பதற்கு அறங்காவலர் சபையினரால் எவரும் நியமனம் செய்யப்படவில்லை. எவருக்கும் அனுமதி வழங்கப்படவுமில்லை. போலி வேடம் தாங்கி வருபவர்கள் மீது, மிகவும் விழிப்பாகவும், எச்சரிக்கையாகவும் இருக்குமாறு வேண்டுவதுடன் எக்காரணம் கொண்டும் எவரிடமும் இந்த ஆலயத்தின் பெயரால் நிதி வழங்க வேண்டாமெனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

திருப்பணிக்காக நிதியுதவி செய்ய விரும்புபவர்கள் தபால் மூலம் ''பொருளாளர்'' ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு என்ற முகவரிக்கு காசுக் கட்டளை / காசோலை மூலமாக அனுப்பி உதவலாம். வங்கி மூலம் நிதியுதவி செய்ய விரும்புவோர் பின்வரும் முகவரிகளிலுள்ள இலங்கை வர்த்தக வங்கியின் ஆலய நடைமுறைக் கணக்கு இலக்கங்களில் வைப்பில் இட்டு உதவலாம் என்பதைப் பணிவன்போடு அறியத் தருகின்றோம்.

நன்றி!

★ அம்பிகையின் அருளாசிகள் அனைவருக்கும் இனிதே கிடைப்பதாகுக ★

**யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி**
A/c No: 12330
**Commercial Bank of Ceylon Ltd.,**
474, Hospital Road,
Jaffna.

**கொழும்பு வர்த்தக வங்கி**
01-2426285 - 01
**Commercial Bank of Ceylon Ltd ,**
180/1/31, Peoples Park,
Shopping Ccmplex,
Sri Badhlreja Mawatte,
Colombo - 11,

பொருளாளர்,
**அறங்காவலர் சபை,**
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

(51018)

# தொழிற் பயிற்சிகள்

## றேடியோ, ரெலிவிசன், விடியோ, டெக் றிப்பியறிங்

சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் திருத்தப்படும் முறைகள் ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.

காலம் 8 மாதம்

## எயர் கொண்டிசனிங்

சகல குளிர்சாதனங்களும் இயங்கும் முறை ஏற்படும் பழுதுகள், திருத்தப்படும் முறை செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

காலம் 6 மாதம்

**பயிற்சிகள் ஆரம்பம்: 12-11-97 (கிழமை நாள்களில்**
**15-11-97 (சனி, ஞாயிறு)**

குறிப்பு: தொழில் புரிவோர் பயிற்சி பெறக் கூடிய முறையில் சனி, ஞாயிறு மாலை நேர வகுப்புக்கள் நடைபெறும்.

விவரங்களுக்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி, (ரயில்வே கடவையருகில்) யாழ்ப்பாணம்.

(51036)

# ஆத்மசாந்தி அஞ்சலி

திருமதி
**இரத்தினசபாபதிக் குருக்கள் சங்கரிஅம்மா**

எங்கள் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் கடந்த பதினேழு ஆண்டுகள் பிரதம குருக்களாக அருட்பணியாற்றி வருகின்ற

சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி இ. சங்கரிஅம்மா**

04. 11. 97 செவ்வாய்க்கிழமை முருகப் பெருமான் திருவடியை அடைந்தமை குறித்து -

எமது தேவஸ்தானம் ஆத்மசாந்தி அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் குடும்பத்தவர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிக்கின்றோம்.

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
தெல்லிப்பழை.

(சி/2001)

# IN FOND REMEMBRANCE



BORN: 28 — 02 — 28

DIED: 10 — 10 — 97

**Rt. Rev. Dr. D. J. AMBALAVANAR**

( Former Bishop, Jaffna Diocese, Church of South India) .

Fondly Remembered and greatly missed by his- Family

''Hold thou thy cross before my closing eyes;
Shine through the gloom, and point me to the- skies
Heaven's morning breaks, and earth's vain - shadows flee,
In life, in death, O Lord, Abide with me. ''

**MISSION HOUSE,**
**Manipay.**

(51016)

# 90 ஆவது நாள் நினைவஞ்சலி



ஒளி: 19 — 09 — 1928

இருள்: 18 — 08 — 1997

கீரிமலை நல்லையா சுப்பிரமணியம் (சமாதான நீதிவான்).
அவர்களின் பிரியபத்தினி

## சிவபாக்கியம்

அடிசிற்கினியாளே அன்புடைய மாதே
படிசொற் தவறாத பாவாய் — அடிவருடிப்
பின் தூங்கி முன்னெழுந்த பேதாய் போதியோ
என் தூங்கும் என்கண் இரா ...

எனும் தெய்வப் புலவரின் திருவாக்கிற்கமையப் பாரில் வாழ்ந்து காட்டிய பதிவிரதா சிரோன்மணியே! உமது மூளையெனும் கடலுள் மீனாக வாழ்ந்த நான் நீரின்றி ஒரு கணமும் வாழ மாட்டேன் என்பது தெரிந்தும் பூவும் பொட்டுமாகப் போவேனென்னும் பந்தயத்தில் வெற்றி கொண்டு புன்சிரிப்புடன் பிரிந்த தெய்வமே! எனை எப்போ அழைப்பீரென ஏங்கித் தவிக்கும்;

**கணவன்.**

(சி/2000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பேசி என்ன பயன்?

இலங்கை பிராந்தியங்களின் ஒன்றியமாக அமைய வேண்டும் என்ற அரசாங்கத்தின் யோசனையை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, ஏற்றுக்கொள்ள முடியாது என்று நிராகரித்துவிட்டது.

கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. பிரஸ்தாப நிறைவேற்றுக்குழு கட்சியின் முக்கிய அதிகார பீடங்களில் ஒன்றாகும். ஆகையால் கட்சியின் இந்த நிலைப்பாட்டில் இனிமேல் மாற்றம் வருவதற்கான சாத்தியம் எதுவுமில்லை.

தமிழ் மக்களின் நாற்பது வருடக் கோரிக்கையான சுயாட்சியை, அரசின் தீர்வு யோசனை வடிவம் பெரிய அளவில் நெருங்கவில்லை. ஆயினும்—

அதற்கான ஆரம்பப் புள்ளியாக பிராந்தியங்களின் ஒன்றியம் உள்ளது எனலாம்.

இதனையும் ஐக்கிய தேசியக் கட்சி நிராகரிக்கிறது என்றால் தமிழர்களின் பிரச்சினையை சிங்களத் தலைவர்கள் ஒருபோதும் தீர்க்கமாட்டார்கள் என்பதே தேற்றம்.

இந்த நாடு ஒற்றையாட்சி அமைப்பு முறையில் இருந்து மாற்றப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டை இறுக்கிப் பிடித்துக் கொள்ள ஐ. தே. கட்சி முடிவு செய்திருப்பது, விரும்புவது, தமிழர்களுக்கு சிறிய உரிமைதானும் வழங்கப் படக்கூடாது என்பதன் மறைமுகச் செயற்பாடே.

அதிகாரப் பரவல் முறையை இலங்கையில் அறிமுகம் செய்தது எமது கட்சியே. அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் இனப்பிரச்சினைத் தீர்வுக்குரிய முதலாவது முன்னேற்றகரமான நடவடிக்கை. எனினும் அதன் கீழான அதிகாரப்பரவல் போதுமானதாக இல்லை. மேலும் பல திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்— இவ்வாறெல்லாம் சொல்கிறார்கள் ஐ. தே. கட்சியின் உயர் தலைவர்கள்.

ஆனால் பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற ஆட்சி அலகு முறையை நிராகரிக்கிறார்கள். பிராந்தியங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்வதை ஏற்க முடியாது என்கிறார்கள். இது ஒரு விசித்திரமான அரசியல்நிலைப்பாடு?

இலங்கையில் சிங்கள மக்கள் மட்டும் வாழவில்லை. இது ஒரு பல்லின, பல்சமய நாடு. இங்கு சகல இன, சமய, சமூக மக்களும் சேர்ந்து வாழ்வதற்கு சமஷ்டி(Fedaralism) அல்லது கூட்டிணைந்த (Confedaration) ஆட்சி முறை மட்டுமே உதவும். அவையே இனங்களை பிணைத்து வைக்கக்கூடியவை.

ஒற்றையாட்சி முறையின் கீழ் எத்தனை வீதம் அதிகாரத்தைப் பரவல் செய்தாலும், நிர்வாக மற்றும் நிறைவேற்று அதிகாரங்களை நாணயக்கயிறு போல, கொழும்பில் பிடித்துக் கொண்டால் இன முரண்பாடும் பூசல்களும் தொடரவே செய்யும்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் ஒற்றை ஆட்சி முறையை பேரம் பேச முடியாத அரசியல் சரக்கு என்று கவ்விப் பிடித்துக் கொள்ள முடியும் என்றால்—

தமிழர்கள் தமக்குப் பூரண சுயாட்சி தேவை; தமக்கென நிறைவான அதிகாரங்கள் கொண்ட தனியான ஆளும் மன்றம் தேவை என்று கேட்பதில் என்ன தப்பு?

இரண்டு நிலைப்பாடுகளுக்கும் உள்ள இடைவெளி மலைக்கும் மடுவுக்கும் இடையில் உள்ளது போன்றதாகும்.

ஒற்றையாட்சியை விட்டுக் கொடுக்க மறுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, அரசாங்கத்துடன் பேசினாலும் என்னபலன் கிடைக்கப் போகிறது?

## சடலம் அரச செலவில் அடக்கம்

தென்மராட்சி, நவ. 9

சாவகச்சேரி ஆஸ்பத்திரி மார்புநோய் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு கடந்த புதன்கிழமை மரணமடைந்த நோயாளியின் சடலம் நேற்று வைத்தியசாலை செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

பருத்தித்துறை புலோலிச் சந்தியைச் சேர்ந்த பீ. இறப்பியல் (வயது 48) என்பவரே மரணமானவராவார்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி வார்ட்டில் அனுமதிக்கப்பட்ட இந்த நோயாளி கடந்த புதன்கிழமை மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## செவ்வாய் முதல் வரப்பிரகாஷ் வாரம்

கொழும்பு, நவ. 9

பேராதனைப் பல்கலைக்கழகம் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் ஒரு வார காலத்தை வரப்பிரகாஷ் வாரமாக அனுஷ்டிக்க இருக்கிறது:

பல்கலைக்கழகங்களில் ராகிங், துன்புறுத்தல், சித்திரவதை என்பவற்றை ஒழித்துக் கட்டும் இயக்கத்தின் ஒரு பகுதியாக இந்த வாரம் அனுஷ்டிக்கப்படும். (இ-9)

## வானொலியில் இன்று கேள்வி பதில்

யாழ்ப்பாணம், நவ. 9

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.10 முதல 8.30 மணி வரை ''வாரம் ஒரு வலம்'' என்னும் நிகழ்ச்சி ஒலிபரப்பாகவிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பலருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டு நேரடியாக ஒலிபரப்பும் வகையில் இந்த நிகழ்ச்சி அமையவிருக்கிறது. ஈரப்பெரிய குளம் உப வானொலி நிலையம் ஊடாக ஒலிபரப்பாகவிருக்கும் இந்த நிகழ்ச்சியை ரி.உருத்திராபதி, ஆர். யோகராசா ஆகியோரின் உதவியுடன் பிரபல அறிவிப்பாளர் இளையதம்பி தயானந்தா நடத்துகிறார். (இ-3)

# வீட்டுக்காரரை கட்டிப் போட்டு விட்டு நள்ளிரவில் நகைகள் கொள்ளை

## கெருடாவிலில துணிகரச் சம்பவம்

சாவகச்சேரி, நவ. 9

இரும்புக் கம்பிகள் சகிதம் வீட்டுக்குள் நுழைந்த ஐந்து பேர் கொண்ட திருட்டுக் கும்பல், வீட்டுக் காரரைக் கட்டிப் போட்டுவிட்டு தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றது.

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு இச்சம்பவம் இடம் பெற்றது.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது—

வீட்டுக்காரர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயம் திடீரெனவீட்டினுள் நுழைந்தனர் திருடர்கள்.

வீட்டுக்காரர் எழுந்த போது 'ஒருவரும் சத்தம் போடக் கூடாது. சுட்டுப் போடுவோம்' எனப்பயமுறுத்தினர்.

வீட்டுக்காரரின் கைகளைக் பின்புறமாகக் கட்டிவிட்டு வீட்டை சல்லடைபோட்டுத் தேடினர்.

திருடர்கள் எரிந்து கொண்டிருந்த லாம்பை அணைத்து விட்டு டோர்ச்லைட்டுடனேயே தேடுதல் நடத்தினர்.

லாச்சியை உடைத்து லாச்சிக்குள் இருந்ததாலிக்கொடி, கல்லட்டியல், காப்பு 2சோடி, தோடு என்பனவற்றை அவர்கள் எடுத்துச் சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-31-117)

## சாவகச்சேரியில் நாய்களுக்கு தடுப்பூசி

தென்மராட்சி, நவ. 9

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நாளை திங்கள் முதல் பின்வரும் இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

★ 10-11-97 கைதடி வடக்கு சனசமூக நிலையம்

★ 11-11-97 நுணாவில் மேற்கு அம்பாள் சனசமூக நிலையம்

★ 12-11-97 முகமாலை சனசமூக நிலையம், இத்தாவில் சனசமூக நிலையம்

★ 17-11-97 புத்தூர் சந்தி கமநல சேவைகள் நிலைய அலுவலகம்

★ 18-11-97 மாளர் கிராம அலுவலர் அலுவலகம்

★ 21-11-97 வரணிவடக்கு சனசமூக நிலையம்

★ 24-11-97 மிருசுவில் படித்த மகளிர் குடியேற்ற சனசமூக நிலையம் (இ-117)

## இரத்மலானையில் கைதான இருவரும் விடுதலை

இரத்மலானை தொலைத்தொடர்புப் பரிவர்த்தனை நிலைய வளவுக்குள் நுழைய முற்பட்டதாகத் தெரிவித்து சந்தேகத்தின்பெயரில் கடந்த 5 ஆம் திகதி கைது செய்யப்பட்ட வடபகுதி வாசிகள் இருவரும் அன்றைய தினமே விடுவிக்கப்பட்டனர்.

அரியாலையைச் சேர்ந்த சின்னத்துரை லோகதாஸ் (வயது-22), அவரது தாயார் ஆகிய இருவருமே கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்காக விமான சேவை நடைபெறுகிறதா என்பதை அறிய தொலைத்தொடர்புப் பரிவர்த்தனை நிலையத்திற்குச் சென்ற சமயம் கைது செய்யப்பட்டதாக தற்போது தகவல் கிடைத்துள்ளது.

இவர்கள் பயணம் செய்த ஓட்டோவின் சாரதியிடம் செலூலர் தொலைபேசி ஒன்று இருந்ததாம். இவர்கள் செலூலரில் தொடர்புகொள்ளாமல் ஏன் பரிவர்த்தனை நிலையத்தினுள் சென்று தொடர்புகொள்ள முற்பட்டனர் என்ற சந்தேகத்திலேயே பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர் என்றும் அந்த ஓட்டோவின் சாரதியும் கைதானதாகவும் தெரியவந்துள்ளது.

இவர்களிடம் இரு சயனைட்டுக்கள் இருந்தன என்றும் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. விசாரணையின் பின்னர் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ஐ-9)

## மாரடைப்பால் வீதியில் மரணம்

கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் கந்தசஷ்டி கவசம் படித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த வயோதிபர் ஒருவர் வீதியில் மாரடைப்பால் மரணமானார்.

நல்லூர் செட்டித்தெரு பகுதியில் கடந்த வியாழனன்று இச்சம்பவம் இடம் பெற்றது

வட்டுக்கோட்டை பிளவத்தையைச் சேர்ந்த சுபுழிரம் தபால் அதிபர் சுவாமிநாதர் சண்முகலிங்கம் (வயது 58) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (ஐ 9-30)

## வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் விளையாட்டு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம் யாழ் கன்னியர் மடவித்தியாலயத்தில் நேற்று ஆரம்பமானது. இன்றும் பயிற்சி முகாம் தொடர்ந்து நடைபெறும்.

சுமார் அறுபது பேர் இப்பயிற்சி முகாமில் பங்குபற்றுகின்றனர். (உ)

## யாழ். நகர மேலதிக மரணவிசாரணை அதிகாரி

யாழ். நகர் மேலதிக திடீர் மரண விசாரணை அதிகாரியாக சமாதான நீதிவான் திரு. ரி. ஜெயரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அண்மையில் மாவட்ட நீதிவான் ஏ. என். இராமச்சந்திரன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் முன்னாள் தலைமைக் காரியாலய பொலீஸ் இன்ஸ்பெக்டரும், யாழ். போதனா வைத்தியசாலை தனியார் பாதுகாப்புச் சேவை இயக்குநரும் ஆவார். சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ். மாவட்ட நிர்வாக உத்தியோகத்தராகவும். இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். நல்லூர் கிளையின் போசகராகவும் இவர் பணிபுரிகிறார்.

இவர் எழுதுமட்டுவாள் காலஞ்சென்ற துரையப்பா உடையார் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் ஆவார்.

# எங்கள் அருகிலேயே இருந்து பார்க்குமாறு கேட்கிறான் இறைவன்

இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் இவ்வுலகில் வெறும் மனிதனாக மட்டும் வாழவேண்டும் என வேதங்கள் கூறவில்லை. கிறிஸ்து வாழ்ந்து காட்டியபடி நாமும் வாழ வேண்டும்.

'கடவுட் தன்மையில் விளங்கிய அவர் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் தன்மை பூண்டு மனிதனுக்கு ஒப்பானார்'' (பிலிப்பியர் 2:7). மனித உருவில்தோன்றி சாவை ஏற்கும் அளவிற்கு அதுவும் சிலுவைச் சாவை ஏற்குமளவு வாழ்ந்தார். கிறிஸ்தவர்களாகிய நாம் துன்பங்களை ஏற்றுப் பிறரின் துன்பங்களில் பங்கு கொண்டு வாழ்கின்றோமா?

ஒருகணம் சிந்தித்துப் பார்ப்போம்.

இன்றைய சூழ் நிலையில் நாம் பல்வேறு வகையான பாதிப்புக்கள், துன்பங்கள் அழுத்தங்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றோம். இது நிதர்சனமான உண்மை.

இவற்றின் மத்தியில் இறைவனின் அருளும், இரக்கமும், பிரசன்னமும் தான் எம்மைத் தாங்கிச் சென்றன; வாழ வைத்தன; என்பதை நாம் மறந்து விடுகின்றோம்.

இறைவன் இக்காலகட்டத்தில் எம்மீது பொழிந்த மட்டற்ற அன்பையும், கரிசனையையும், இரக்கத்தையும் பெற்றுக் கொண்ட நாம், அவரின் சாயலாக வாழும் எம் அயல்வருடன் இதைப் பகிர்ந்து வாழ நினைத்தோமா?

நாம் இறைவனைத் தேடி எங்கும் அலைய வேண்டியதில்லை சிலுவையை அணிவதாலோ, கிறிஸ்தவன் என்ற பெயரில்வாழ்வதாலோ நாம் இறைவனைக் காண முடியாது. எம்பக்கத்திலேயே இருந்து என்னைப் பார்க்க மாட்டாயா என்று இறைவன் கேட்பது எம்மவரில் பலருக்குத் தெரிவதில்லை!

### ஞாயிறு நற்பிரசாதம்

ஆம் அயலில் இருக்கும் உன் சகோதரர், அன்பும் ஆதரவும் தேவைப்படுவோர், போரின் கொடுமையால் பாதிப்புற்றோர், யாருமின்றி வைத்தியசாலைகளில் இருப்போர், கல்வியைத் தொடர முடியாது அங்கலாய்க்கும் ஏழைச் சிறுவர்கள், நிர்க்கதியான கைம்பெண்கள் எனத் துன்பத்தின் மேல் துன்பத்தைச் சுமந்து கொண்டு இறைவனின் சாயலில் வாழும் எமது அயலாரில் இறைவனை [illegible] காண வேண்டும்.

வெளி வேடங்களிலும், போலிப் பகட்டிலும், வீண் சம்பிரதாயங்களிலும் உழன்று கொண்டிருப்பதைத் தவிர்த்து எமது துன்பத்தையும் தாங்கிப் பிறர் துன்பங்களிலும் கை கொடுக்க யேசு நம்மை அழைக்கிறார்.

தொண்ணூற்றொன்பது நீதிமான்களை விட மனந்திரும்பும் ஒரு பாவியால் இறைவன் மகிழ்வு அடைகிறார் என்பதை நாம் உணர வேண்டும்.

கைம்பெண் தனக்குள்ள எல்லாவற்றையும், சிறிய தொகையாயினும் மனநிறைவுடன் காணிக்கையாக அளித்தது போல் நாமும் எமக்குள்ளதைப் பகிர்ந்து வாழ இறைவன் எம்மை அழைக்கும் காலம் இது.

நாம் கண் முன் காணும் துன்புறுவோரில் நாம் கண்ணால் காண முடியாத இறைவனைக் காணலாம். இவர்களை அன்பு செய்யும் போது எம்மில் இறைத்தன்மை வளர்கின்றது. அளவிற்கு மீறித்துன்பங்கள் எம்மை வருத்தினும் ஒலிவ மலையில் இயேசு துன்பக் கிண்ணத்தை இறைச் சித்தமாக ஏற்றுப் பிதாவை நோக்கிச் செபித்தார். அதே போல நாமும் பிதாவை இறைஞ்சி அன்பு செய்து பகிர்ந்து வாழ்வோம்.

திருமதி
பி. எவ். சின்னத்துரை.

## நாளை

ஐப்பசி 21

திங்கட்கிழமை

திதி: தசமி

காலை 7.08 வரை.

ஏகாதசி

பின் இரவு 4.46 வரை.

நட்சத்திரம்: பூரட்டாதி

முன் இரவு 11.22 வரை.

உத்தான ஏகாதசி

சுபநேரம்: 12.05-1.35

ராகுகாலம்: 7.35-9.05

(பகலுக்கும் இரவுக்கும் வழைய நேரப்படி.)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பத்மநாபா...

(முதலாம் பக்கத் தொடர்)

டது தொடர்பான இந்த வழக்கில், பூந்தமல்லி தனி நீதிபதி ஆறுமுகப்பெருமாள் ஆதித்தன் நேற்று தீர்ப்பளித்தார்.

தமது 271 பக்கத் தீர்ப்பில் விடுதலைப் புலிகள் தான் பத்மநாபாவையும் மற்றவர்களையும் கொலை செய்திருக்கிறார்கள் என்ற அரச தரப்பு வாதத்தை நீதிபதி உறுதி செய்தார்.

இந்த வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட சின்னசாந்தன் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கிலும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ஒற்றைக் கண் சிவராசன் தலைமையில் ஒரு குழுவினர் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் பத்மநாபாவை கொலை செய்ததாக இந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது

இந்த வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பொட்டு அம்மான் உட்பட ஆறுபேர் தலைமறைவாகியுள்ளனர். என்றும் தெரிவிக்கப்பட்டது.

## 31ஆம் நாள் நினைவலைகள்

### சுளிபுரம்
### முருகேசு நவரத்தினம்

எப்பொழுதும் எங்களுக்காய்
எறித்த முழுநிலவே!
இப்பொழுது எங்களையேன்
இருட்டினிலே விட்டீர்கள்?

பிரிவால் வாடும்
**குடும்பத்தினர்.**

மூளாய் தெற்கு,
சுளிபுரம்.
09-11-1997

(சி/2009)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை நடராசா (ஐயாத்துரை)

போக்காலை வீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நடராசா 26-10-97 இல் மல்லாவியில் காலமாகிவிட்டார்.

அன்னார் தேவிமலரின் கணவரும், வினோ, சுதா, அமரர் குமரதாஸ் ஆகியோரின் தந்தையும், தில்லைநாதன்—வினோவின் (டென்மார்க்) மாமனும் ஆவார்.

தகவல்:
ந. தேவிமலர்
(மனைவி)

போக்காலை வீதி,
உடுப்பிட்டி.

(51055)

### திருமதி கனகம்மா தம்பித்துரை

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், கோப்பாயில் வசித்து வந்தவருமான திருமதி கனகம்மா தம்பித்துரை 07-11-97 இல் கொழும்பில் காலமானார்.

இவர் இளைப்பாறிய ஆசிரியர் இரா. தம்பித்துரையின் அன்பு மனைவியும், மோகனாம்பிகை (ஆசிரியை) கலாநிதி ஸ்ரீதரன் (விரிவுரையாளர்), ரத்தினாம்பிகை (பொறியியலாளர்), தனேஸ்வரி (யாழ். மருத்துவபீட இறுதியாண்டு மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகுமார் (லிகிதர்), சங்கர் (பொறியியலாளர். கனடா) ஆகியோரின் அருமை மாமியாரும் அபிராமி, சயனி, சரண் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நேற்று 08-11-97 கொழும்பில் நடைபெற்றது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆறுமுகம்
(சகோதரன்)

ஆவரங்கால்,
புத்தூர்.

(51047)

### துரைரத்தினம் கார்த்திகேயன்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் மாணவனும் தொண்டமானாறு வீரகத்திபிள்ளை மகா வித்தியாலயத்தின் ஆண்டு 10 மாணவனுமாகிய கார்த்திகேயன் 07-11-97 நள்ளிரவு அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஐயர் வள்ளியம்மாள், காலஞ்சென்ற தம்பிராசா நாகரெத்தினம் ஆகியோரின் பேரனும், துரைரத்தினம், அரியமலரின் அன்பு மகனும் றஞ்சினி, கனகேஸ்வரன் (விற்பனையாளர், பருத்தித்துறை ப.நோ.கூ.ச.), சிவனேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற செல்வக்குமரன், ஜெயந்தாதேவி, ஜெயகணேஷ் (ஆண்டு 11 வீ. மகா வித்தியாலயம் தொண்டமானாறு) ஆகியோரின் அன்புச்சகோதரனும், தங்கவடிவேல் (உப தபால் அலுவலகம், தொண்டமானாறு), ராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், அகல்யா, தயானந்தி ஆகியோரின் மாமனும், தர்சினி, துவாரகா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 09-11-97 இன்று காலை 10 மணிக்கு தொண்டமானாறு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

செல்வச்சந்நிதி,
தொண்டமானாறு.

([illegible])

## ஆசிரியர் பயிற்சி வகுப்பு

சைவசமய ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு அங்குரார்ப்பண வைபவம் இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

இந்த வைபவத்தில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன், யாழ். கல்வித்திணைக்கள வலயம்-2 இன் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.

[இ-109]

## கிழக்கிலும்..

(முதலாம் பக்கத் தொடர்)

ராகிங்கைக் கட்டுப்படுத்தா விட்டால் நாளை முதல் இரண்டாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கப் போவதாக கலை, வர்த்தகப் பீடாதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

பேராதனைப் பல்கலைக் கழக மாணவன் செ. வரப்பிரகாஷ் ராகிங் கொடூரத்தால் மரணமானதைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள இந்த 'ராகிங்' சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-164-5-9)

## கோயில்...

(முதலாம் பக்கத் தொடர்)

மூச்சுத் திணறி இறந்ததாக நம்பப்படுகிறது.

தொண்டமனாற்றைச் சேர்ந்த தெய்வேந்திரன் சுசீந்திரன் (வயது 21), துரைரட்ணம் கார்த்திகேயன் (வயது 16), கனேசந்திரன் சஜந்தன் (வயது 15) ஆகிய மூன்று இளைஞர்களுமே பலியாகினர்.

மந்திகை மருத்துவ மனையில் பிரேத பரிசோதனை இடம் பெற்றது. உடுப்பிட்டி பகுதி திடீர்மரண விசாரணை அதிகாரி வி. நடராசா மரண விசாரணைகளை நடத்தி விபத்து மரணங்கள் எனத் தீர்ப்பளித்தார். அதன் பின் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

(இ-ஐ-173-109)


### எமது வீடியோ CD வெளியீடுகள்!

திருவிளையாடல்
பிஸ்தா
சிறைச்சாலை
கர்ணன்
பத்தினி
பூமணி

எமது புதிய ஒறிஜினல் வெளியீடுகள்!

பிரகாஷ்ராஜ், நீனாவின்
★ விடுகதை (VCD)

சுரேஸ், கிருஷ்ணாவின்
★ ஆஹா (VCD)

ராமராஜன் ஆம்னியின்
★ தெம்மாங்கு பாட்டுக்காரன் (VCD)

**சுப்பஸோ வீடியோ**
யாழ்ப்பாணம்.

குறிப்பு:
வீடியோ CDக்கள் வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி/2010)


## நாகர்கோயில் பகுதியில் புலிகள் - படையினர் மோதல்

வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பகுதியில் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரியவந்தது.

எனினும், இருதரப்பு சேத விவரங்கள் எதுவும் தெரியவரவில்லை.

மோதல் சம்பவம் நடைபெற்றதைத் தொடர்ந்து அப்பகுதியில் ஒரு சில மணிநேரம் பதற்ற நிலை காணப்பட்டது.

(இ-5-36)

## ஜெனரேற்றர்...

(முதலாம் பக்கத் தொடர்)

சாட்சிகள் மேலும் தெரிவிக்கையில் வெள்ளி இரவு நடைபெற்ற திருக்கல்யாண உற்சவம் முடிவடைந்ததும் சனி அதிகாலை 2 மணியளவில் இம் மூன்று இளைஞர்களும் படுப்பதற்காக ஜெனரேற்றர் இருந்த தேர்முட்டி அறைக்குச் சென்றனர்.

அவர்கள் ஜெனரேட்டரை நிறுத்துவார்கள் என நினைத்து நாமும் சென்றுவிட்டோம்.

விடிந்ததும் ஜெனரேட்டர் இயங்கிக்கொண்டிருந்ததை அறிந்து அறைக்குச் சென்றோம்.

அறையின் கதவும் ஜன்னலும் மூடப்பட்டிருந்தன.

ஜன்னலைத் திறந்து பார்த்தபோது ஜெனரேட்டர் இயங்கிக்கொண்டிருந்தது. மூவரும் படுத்திருந்தனர். அவர்களைக் கூப்பிட்டு தடிகளால் தட்டி எழுப்பியபோது அவர்கள் படுக்கையிலிருந்து எழும்பவில்லை.

உடனே கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது மூவரும் இறந்து காணப்பட்டனர் என்றனர்.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். கதிரைவேற்பிள்ளை நச்சுப்புகையைச் சுவாசித்ததால் மரணம் சம்பவித்துள்ளது என்றார்.

விசாரணை முடிவில் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

பருத்தித்துறைப் பொலீஸார் சாட்சிகளை நெறிப்படுத்தினர்.

(இ-173)

### இந்துசமய அறநெறிப் பாடசாலை
### ஆசிரியருக்கான கருத்தரங்கு

காலம்: 09-11-1997 ஞாயிற்றுக்கிழமை
இடம்: நாவலர் கலாசார மண்டபம்
நேரம்: 9-00 மணி (புதியநேரம்)

தலைவர்: திரு. து. வைத்திலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர்)

சிறப்பு விருந்தினர்:
திருமதி சாந்தி நாவுக்கரசன்
(பிரதிப் பணிப்பாளர், இந்துகலாசார அமைச்சு)

பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான இக்கருத்தரங்கில் பின்வரும் நிகழ்வுகள் இடம் பெறும்.

★ ஆசியுரை:
நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

★ கருத்துரைகள்:
கவிஞர் சோ. பத்மநாதன்
விரிவுரையாளர் திரு. சிவ. மகாலிங்கம்

★ பண்ணிசை:
பண்ணிசைச் செல்வன் திருஞானசம்பந்தன்

★ ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்குதல்.

★ பாடசாலைகளுக்கான நூல்கள், பண்ணிசைக்குரிய சுருதிப்பெட்டி, தாளம் என்பன வழங்குதல்.

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள்
மற்றும்
அபிமானிகள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

- மேலதிக அரசாங்க அதிபர்

யாழ். செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/2007)

### வெல்வில்
### இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி தேவஸ்தான வழிபடுவோர் சபையின்
### சிரமதான அழைப்பு
### இன்று 09-11-97

மேற்படி ஆலயம் இடிந்து தரைமட்டம் ஆகியுள்ள நிலையில் இவ்வாலயத்தை மீளவும் கட்டி எழுப்புவதற்கு ஏதுவாக சிரமதானம் மூலம் இடிபாடுகளை அகற்றுவதற்கு உதவும் முகமாக இன்று 09-11-1997 ஞாயிறு காலை 8 மணிக்கு சபையின் உறுப்பினர்கள் அனைவரையும் ஆலய வளாகப் பகுதியில் ஒன்று கூடுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி.

— தேவஸ்தான வழிபடுவோர் சபை சார்பில்
நிர்வாக சபை

(51053)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09-11-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org